
# க/மெ/ மகாபெரியத்தென்ன த.ம.வி
# செனரத்வெல



## பாராட்டு விழா 2008

## சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*


# RANJITHA TRADERS

Importers, General Merchants


No. 180, Colombo Street, Kandy.
Tel : 081-2232350, 2229155
Fax : 081-2229156
Mobile : 0777-300041

No. 136/F, Dam Street, Colombo - 12
Tel : 011-2431802-3
Fax : 011-2431809

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் தாய் வாழ்த்து

காதொழிரும் குண்டலத்தாலள் கனிமொழியாழ் வாழ்க!
கைக்கு வளை யாபதிகோள் கன்னிகையாள் வாழ்க!
மேதகுமென் மார்பிடை சிந்தாமணியாள் வாழ்க!
மின்னும் மணிமேகலை சூழ் மெல்லிடையாள் வாழ்க
சீத மலர் பாத மொழி சிலம்புடையாள் வாழ்க!
சேர சோழ பாண்டியர் தம் செல்வமகள் வாழ்க!
நீதியுறு செங்கோலாய் துாய குறள் தாங்கும்
நிகரறியாசெந்தமிழ்த்தாய் நீடுழிவாழ்க!
நீடுழிவாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை கீதம்

வாழியவே! வாழியவே!
வாழ்க எம் கலையகம் வாழியவே!
மான்புடன் விளங்கும் மானிடர் போற்றும்
மாபேரியதன்னை வித்தியாலயம் வாழ்க!

பற்பல கலைகள் பயின்றிட நாமே
பக்தியுடன் இங்கு கூடிடுவோம்!
பணிவுடன் ஈசன் பாதம் பணிந்து
பாடமதை நாம் பயின்றிடுவோம்.!

மலையக மக்கள் மகிழ்ந்திட நாமே
மான்புடன் விழித்திடுவோம்!
வீறுடன் விளங்கும் வித்தியாலயம் தன்னை
விக்டோரியா அணைப்போல் உயர்த்திடுவோம!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபெரியதென்ன த. ம .வித்தியாலயத்தில்
பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை
வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

குமரன் த.வி
இறங்கலை

அதிபர் ஆசிரியர், மாணவர்கள்

With Best Compliments of





WIN ENGINEERING WORKS

3/C, KANDY ROAD
KENGALLA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 - 2008 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, 100 இற்கு மேற்பட்ட புள்ளியை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த

மாணவர்களின் விபரம்

| ஆண்டு | மாணவர்களின் பெயர்கள் |
|---|---|
| 2004 | மனோகரன் கிரிஷாந்திமாலா |
| | செல்வரட்னம் சப்னா |
| 2006 | யோகநாதன் கமலக்கண்ணன் |
| | சுந்தர்ராஜா சுரேஸ்தேவன் |
| 2007 | குமரன் சஜுபிரசாந்த் |
| | சுந்திரகாந்த் விதுாஷன் |
| | தனராஜ் கீர்த்திகா |
| | ராஜன் பவித்ரா |
| | ஆனந்தராஜ் பிரியங்கா |
| | சைமன் சவிதா |
| | சங்கரலிங்கம் பிரவீன்ராஜ் |
| | தியாகராஜ் வினோதினி |
| 2008 | அந்தனி அநுாஷா |
| | சேகர் ரிலக்ஷனா |
| | மாடசாமி ரிஷ்வினி |
| | ரட்ணசிங்க பாஸ்கர் ரோஷினி |
| | துரைராஜ் துஷாந்தினி |
| | பாலகிருஷ்ணன் வினித்பிரியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 - 2007 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் கல்விப்பொதுத்தராதரப்பத்திர சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களின் விபரம்

| ஆண்டு | மாணவர்களின் பெயர்கள் |
| --- | --- |
| 2004 | தனராஜ் கிறிஷாந்தா |
| 2005 | ஜுவானர் அமல்ராஜ் சேவியர் |
| | செல்வரட்ணம் சர்மிளா |
| 2006 | செல்லதுரை கிருபாவாணி |
| | ஸ்ரீவேல் ஸ்ரீநாத் |
| | ராமச்சந்திரன் சுதேஷ்பிரியன் |
| | சகாதேவன் யோகராஜ் |
| 2007 | தம்பிராஜா குணசீலன் |
| | ராமச்சந்திரன் மோகன்ராஜ் |
| | மாடசாமி சத்தியராஜ் |
| | மனோகரன் ஸ்ரீசுதர்ஷன் |
| | கந்தலிங்கம் ஜெயப்பிரியா |
| | தியாகராஜா லோஜினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006-2007 ஆம் ஆண்டுகாலப்பகுதியில்
கல்விப்பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில்
சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த

## மாணவர்களின் விபரம்

| ஆண்டு | மாணவர்களின் பெயர்கள் |
|---|---|
| 2006 | சிவஞானசுந்தரம் கங்காதரன் |
| | செல்லதுரை மோகன் |
| | சோமசுந்தரம் ஸ்ரீகாந்த் |
| | செல்வராஜ் துஷாந்தன் |
| | முத்துசாமி உதயகுமார் |
| | நடராஜா பிரிந்தேஷ்வரி |
| | கணேஷன் கோகுலவதனி |
| | கனகரட்ணம் மேனகா |
| | சிவபெருமாள் பிரமீளா |
| 2007 | சுப்பையா சிவராமகிருஷ்ணன் |
| | சிவநாதன் கஜிபனா |
| | சுப்ரமணியம் நிலுஷினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - பலகொல்ல



**கல்வி கடலில் மூழ்கி கல்வி எனும் நீரைப்பருகி கல்வி**
**தேவதையின் அருடகடாட்சம் பெற்று சிறந்த**
**ஒரு கல்வி மானாக**
**திகழ மாணவ செல்வங்கள் அனைவருக்கும்**
**ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின்**
**அருட்கடாட்சமும் ஆசிர்வாதங்களும்**

**ந.சொர்ணேஸ்வரசர்மா**
**பிரதம குரு**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
2008 இல்
சாதனை படைத்த மாணவச்
செல்வங்களை
மனதார வாழ்த்துகின்றோம்.

## க/அப்லன்ட் தமிழ் வித்தியாலயம்
## பேராதெனிய - கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா பெரியதென்ன த.ம.வி பாடசாலை வரலாறு

1917ம் வருடம் ஜுலை மாதம் 20ம் திகதி வெஸ்லின் மிஷின் என்னும் சபையால் மகாபெரியதென்ன தமிழ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு ஆசிரியர் 13 பிள்ளைகக்கு கற்பித்து வந்ததாகக் கூறப்படுகிறது. அவரது பணி முடிவடைந்ததும், திரு. இலட்சுமணன் என்ற ஒரு ஆசிரியர் வந்தாரென்றும், அவரது பல காரணங்களால் ஊரை விட்டுப் போக மறுபடியும் பாடசாலை மூடப்பட்டதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

1917 முதல் 1920 வரை திரு. V. பொன்னையா, திரு. R. முருகானந்தன் போன்றவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

1920ம் வருடம் ஜுலை மாதம் மீண்டும் இப்பாடசாலை திறக்கப்பட்டு திரு. A.M. ஜோசப் அவர்களை அதிபராகக் கொண்டு வெஸ்லின் மிஷினால் இப்பாடசாலை நடாத்தப்பட்டது. இப்பாடசாலையின் கூரை தென்னோலையால் வேயப்பட்டு மாணவர்கள் புளியம் மரத்தடியில் மணதரையில் அமர்ந்தும் கற்றார்கள் எனத் தெரிகிறது. வெஸ்லின் மிஷன் இப் பாடசாலையை தோட்ட முகாமையாளரிடம் கையளித்து விட இது தோட்டப் பாடசாலையாக 1922ம் வருடம் முதல் செயல்பட்டு வந்தது. அதன் பின்னரே ஆசிரியர் விடுதியின் கூடிய முதலாவது கட்டிடம் அமைக்கப்பட்டது.

1958ம் வருடம் திரு. A.M. ஜோசப் அவர்கள் ஓய்வு பெற்றப்பின் அவரது மகனான திரு. J. ஜோசப் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார்.

1977 இல் இப்பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. அப்போது மாணவர்களின் தொகை 230 ஆகும்.

1984 இல் இரண்டு ஆசிரியர்களால் தரம் 5 வரை கற்பிக்கப்பட்டது.

1986 இல் பாடசாலையின் இரண்டாவது கட்டிடமும், 1989 இல் மூன்றாவது கட்டிடமும் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ம் வருடம் ஜுலை மாதம் முதல் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எமது பாடசாலையில் தளபாட வசதிகள் இருந்த போதும் சிறந்த விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வு கூடம், போன்ற வசதிகள் இல்லை.

எமது பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் இலங்கை வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்றே கூற வேண்டும். ஏனெனில் அன்றைய முடிக்குரிய அரசியான விக்டோரியா மகாராணிக்கு சொந்தமான பெருந்தோட்டங்களில் எமது பாடசாலை அமைந்துள்ள பிரதேசமும் ஒன்றாக இருந்துள்ளது. அதனால் தான் இன்னும் வின்டோரியா என்னும் பெயர் இப்பிரதேசத்தில் பிரசித்தம் பெற்ற ஒரு பெயராக வழங்கி வருகின்றது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற கற்குகை பௌத்த ஆலயங்களில் ஒன்றான பம்பரகல என்னும் ஆலயமும் எமது பாடசாலைக்கு அண்மையிலேயே காணப்படுகின்றது. இதுவும் இங்குள்ள சிறப்புகளில் ஒன்றாகும்.

பாடசாலையைச் சுற்றிலும் குன்றுகள் உயர்ந்து, நிமிர்ந்து நிற்பது அன்று அசோகவனத்தில் சீதாபிராட்டியாரைக் காவல் காத்த காவலரக்கியரை நினைவூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

இச் சூழலில் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் எனும் பல்வேறு மதத்தவர்கள் வாழ்ந்தாலும் அவர்களிடையே ஒற்றுமை மேலோங்கி நிற்கிறது. சுகதுக்கங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கலந்து கொள்கின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் மனதிலிருந்து........



மலையும் மலை சார்ந்த இடமாம் குறிஞ்சிப் பிரதேசமதில், மகாராணியின் நாமமதைச் சுமந்த, பசுமை மிகுந்த நகராம் அழகிய விக்டோரியா தனில், வளமளிக்கும் தென்னந்தோப்புகளுக்கும், பிரசித்தம் மிக்க விக்டோரியா அணையிற்கும் மத்தியில் அமைந்து, மலையக மாணவர்களின் அறிவுக்கண்களைத் திறக்கும் செயல்மிக்க சேவையினை ஆற்றி வருகின்ற மகாபெரியதென்ன தமிழ் மகா வித்தியாலயத்தினால் நடாத்தப்படுகின்ற பாராட்டும் பரிசளிப்பு விழாவினையிட்டு பெருமிதம் கொள்வதோடு, எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் அதிபராக 2003 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பின்னர், கல்விப்பொதுத்தராதர உயர்தரத்தின் கலைப்பிரிவை ஆரம்பித்து வைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு திலகமிட்டாற்போல் அதே ஆண்டில் 4 மாணவர்கள் ஸ்ரீபாத கல்வியிற் கல்லூரிக்கு தெரிவாகி மலையக சமூகத்திற்கு சேவையாற்றப்போகும் ஆசிரியராக தெரிவாகியுள்ளமை இப்பாடசாலைக்கும் இப்பாடசாலையின் அதிபர் என்ற வகையில் எனக்கும் கிடைத்த முதல் வெற்றி எனக்கூறிக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன். வருடந்தோறும் நடைப்பெறுகின்ற ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக அதிகரித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஆம் ஆண்டு நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்ற இலக்கினை நோக்குமிடத்து எனது சேவைக்காலத்தில் கிடைத்த சந்தோஷமான விடயமாக கருதுகின்றேன்.

இவ்வாறாக பாடசாலையின் படிமுறை ரீதியிலான வளர்ச்சிக்கு என்னோடு இணைந்து பங்காற்றியவர்களுள், இப்பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு அரும்பாடுபட்ட முன்னாள் அதிபர் P.G.ஜோசப் ஐயா அவர்களையும் மற்றும் என்னோடு சேவை புரியும் ஆசிரியர் குழாம்களையும் என் ஆசி உரையில் வாஞ்சையுடன் ஞாபகப்படுத்திக்கொள்கின்றேன். மேலும் இப்பாடசாலையில் குறைபாடாக இருந்த குடிநீர் வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதிகளை நிறைவு செய்வதற்கும், மாணவர்களுக்கு இலவசமாக பயின்று கொள்ள முடியுமான கணினிப்பயிற்சி நெறி போன்ற பல்வேறு காரியங்களை என்னுடைய சேவைக்காலத்தில் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருந்தமையினையிட்டு அகமகிழ்கின்றேன். பாடசாலைக்குத் தேவைப்படுகின்ற இவ்வாறான அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்கு எனக்கு உதவி புரிந்த முறைசார், முறைசாரா நிறுவனங்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இப்பாடசாலை வளர்ச்சிக்கென அரும்பாடுபட்டு வரும் எனது மாணவச் செல்வங்கள், ஆசிரியர் குழாம், கல்விசார் உத்தியோகத்தர்கள், பழையமாணவர்கள், கல்விசாரா நிறுவனங்கள், நலன் விரும்பிகள் யாவருக்கும் எனது நன்றியைக் கூறுவதோடு, இப்பாடசாலை இனி வரும் நாட்களில் புலமைப்பரிசில் பரீட்சை, O/L, A/L, கணினி கற்கைநெறி, விளையாட்டு ஆகிய சகல துறைகளிலும் சிறந்து விளங்கி யாவரும் போற்றும் ஓர் உத்தம பாடசாலையாக திகழவேண்டும் என எனது இதயபூர்வமான வேண்டுதல்களை முன்வைத்து யாவும் சிறப்புற திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.K.மனோகரன்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RIERP செயற்றிட்ட மாவட்ட இணைப்பாளரின் ஆசியுரை



எழில் கொஞ்சும் மலையகத்தில் அழகிய சூழலில் மலையக மாணவர்களின் கலைக்கூடமாக மகாபெரியத்தென்னை தமிழ்க் கல்லூரி அமைந்துள்ளது. பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் தன் கல்வி நடவடிக்கைகளைச் சிறப்புற மேற்கொண்டுவரும் மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சாதனை படைத்ததென்பது பெருமைக்குரிய விடயமாகும். அவர்களை கௌரவிக்குமுகமாக வெளியிடும் சிறப்பு மலருக்கு ஆசியுரை எழுதுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். வருடம் தோறும் ஒவ்வொருவர் பரீட்சையில் சித்தியடைந்த நிலைமாறி இவ்வருடம் ஐந்துமாணவர்களை சித்தியடையச் செய்த பெருமை அதிபரையும் ஆசிரியர்களையுமேசாரும். இவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

"வளரும் பயிரை முளையில் அறியலாம்" என்பதற்கமைய ஐந்தில் சாதனைமிக படைத்த மாணவர்கள் எதிர்க் காலத்தில் சிறந்த கல்விமான்களாக உருவாகுவார்கள் என்பது திண்ணம். ஆகவே அவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டியது கல்விப்புலத்தில் இருக்கும் அனைவரினதும் பொறுப்பாகும். இவ்வகையில் பாடசாலை வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி மாணவர்களை அதன் உச்சப்பயனை அடையச் செய்ய வேண்டும். அவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் முகமாக வழங்கப்பட்ட வசதிகளை உயரிய முறையில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறு கல்வி என்னும் அகல் விளக்கை ஏற்றி அறிவு என்னும் சுடரை ஒளிரச் செய்து எதிர்காலத்தில் உயர் வகுப்புகளிலும் மாணவர்கள் சாதனை ஏற்படுத்த வேண்டும் என உளமாற வாழ்த்துகின்றேன்.

திருமதி PCL ஜீவசேயன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
RIERP செயற்றிட்ட மாவட்ட இணைப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best wishes from

**KAVIJA ELECTRICAL**

Rajarata Super Market,
2nd Floor,
98-2/1, COLOMBO STREET,
KANDY.
Tel:
081 2233215,5627455
Fax: 081 22244055

With Best wishes from

**DOLLAR TRADERS**

No: 27, YATINUWARA
PATU MAWATHA,
KANDY

T.P: 081-2232629
FAX: 081-2224539

**With Best wishes from**

LT

LUCKEY TRADERS

DEALERSIN ALL KIND OF OFF
CUT BOADS,PAPER,POLITHENES
AND PICTURES,POSTERS

50A Yatinuwara Patu Mw,
Kandy
T.P. 0812225155

WITH BEST WISHES FROM

W. Ravindran
Proprietor

NEW HOME CENTRE

The complete home experience

NO 9, KANDY ROAD, BALAGOLLA, KENGALLE.

Tel: 081 2421311, 081 2423740, Cool Line: 077 9093466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண உதவி கல்வி பணிப்பாளரின் ஆசியுரை



அறிவு வளர திறன் மேம்பட மனப்பாங்கு விருத்தியுற பயிற்சி வழங்கி மாணவர்களின் சாதனைகளை சஞ்சிகையாக வெளியிடும் மாபெரித்தென்ன தமிழ் மகா வித்தியாலயத்திற்கு எனது நல்லாசிகள்.

மாணவர்களின் பெயர் பொரிக்க வைத்த தெவிட்டாத தேன் எனக் கருதும் இச் சஞ்சிகைக்கு எனது வாழ்த்தினை அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய நாள் பலரது வாழ்வில் மறக்க மடியாத நாளாக அமைகின்றது. பல மாணவர்கள் இன்று பாராட்டப்படுகின்றார்கள். பல மாணவர்களது ஆக்கங்கள் இன்று முதன் முறையாக நூல் வடிவம் பெறுகின்றன. அவ்வாறு மாணவர்களை மட்டுமல்லாது ஆசிரியர்களையும் கௌரவித்து ஊக்குவிக்கும் ஒரு பெருமுயற்சியாக அதிபர் இதனை மேற்கொண்டுள்ளமைக்கு எனது பாராட்டுக்கள்

சாதனை படைத்த அனைத்து மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியப்பெருந்தகைக்கு எனது நல்வாழ்த்துகள் உங்களது பணி மென்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு அருள் புரிவாராக!.

என் அன்பின் மாணவச் செல்வங்களே!

உங்களது எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் இடுவது உங்கள் பள்ளி வாழ்க்கையே மாறிவரும் உலகின் சவால்களை சமாளிக்க போதிய பயிற்சியினை வழங்குவதும் பள்ளிக்கூடமே. எனவே

படிப்படி நீ படிப்படி.
படிப்படி நீ படிப்படி,
அப்படி இப்படி நீ மனதை அலையவிடாமல்
உன் அற்புத அறிவை சிதற விடாமல்
படிப்படி நீ படிப்படி.

திருமதி.P.இராமநாதன்
உதவி கல்வி பணிப்பாளர்
மாகாண கல்வி திணைக்களம்
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## , வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் கல்வி வரலாற்றில் பெருந்தோட்ட தமிழ்மொழிப் பாடசாலைகள் இலங்கையின் தேசிய மட்ட கல்வியுடன் ஒப்பிடும்போது பின் தங்கி காணப்பட்டது. இந்நிலைமையானது தற்போது மாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கண்டி மாவட்டத்தில் தெல்தெனியா கல்வி வலய தமிழ் மொழிப்பாடசாலைகளில் ஓரிரண்டு மாணவரே புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வந்துள்ளனர். இவ்வருடன் எமது கல்வி வலயத்தில் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் 6 மாணவர்கள் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை பாராட்டத்தக்கதாகும். இதில் 4 மாணவர்கள் மகாபெரியத்தென்ன தமிழ் மகா வித்தியாலய மாணவர்களாவர்.

இந்நிலை மேலும் உயரவேண்டுமென வாழ்த்துவதோடு இதற்காக உழைத்த மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்,பெற்றோர் அனைவரையும் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திரு. A.G. தர்மசேன
வலய கல்வி பணிப்பாளர்
தெல்தெனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தெல்தெனிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள மகாபெரித்தென்ன த.ம.வித்தியாலயம் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் பெற்று வருகிறது. 1-11 வரை இருந்த வகுப்புக்கள் 12-13 ஆம் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பது மிக முக்கியமான விடயமாகும்

5 ஆம் வகுப்பு புலமைபரிசில் பரீட்சையில் 2008 ஆம் ஆண்டு நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை வரலாற்றிலும் தெல்தெனியா வலயத்திலும் இந்தச் சாதனை மிக உயர்வானதாக மதிக்கப்படுகின்றது. இவ்வாறாக மாணவர்கள் சித்தி பெறுவதற்கு கற்பித்த ஆசிரியை திருமதி ந. நலீமா நிரோசினிஅவர்களது அயராத முயற்சியும் அதிபரின் உயர்வான வழிக்காட்டலும் ஏனைய ஆசிரியர்களின்பக்கத்துணையும்காரணங்களாய் அமைந்தன.

பௌதீக வளங்கள் குறைவாக இருந்தாலும் அதிபர் ஆசிரியர்களின் செயற்பாடு இவ்வாறான சாதனைகள் படைப்பதற்கு காரணமாய் அமைந்தன. மேலும் பாடசாலை சிறப்புற வளர்ச்சி பெறுவதற்கு வாழ்த்துகிறேன். பாடங் கற்பித்த ஆசிரியருக்கும் வழிநடத்திய அதிபரிற்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.

சு.தேவமனோகரன்
உதவி கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
தெல்தெனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments of**

# UNITED BOOK SHOP

Dealers in papper, Fancy Goods
&
All type of School Item

No: 22/1, New town, Digana
Rajawella
T.P. 081-2374165
fax: 081-2376705

**2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற எமது பாடசாலையின் மாணவர்களை வாழ்த்துகிறோம்**

K.கிருஸ்னவேணி ஆசிரியை
&

S. சசிதரன் K. ஜெயபிரியா
N.ரஜனிகாந்த் V. லீலாவதனி
B.வினுபெர்னான்டோ G. விவேக்
T.லோஜினி
J.பொஸ்கோ N.ரெஜீனா

**தரம் – 12 (கலை பிரிவு)**

*க/மெ/மஹா பெரியத்தென்னை த.ம.வி*
*செனரத்வெல*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க / தெ / மஹாபெரியதென்ன தமிழ் வித்தியாலயம்
## புலமை பரீட்சை வெற்றிகளும் பங்களிப்பும் புத்தக வெளியீடும்
## முன்னால் அதிபரின் வாழ்த்துரை

''விசுவாசம் கொள்ளுங்கள்! வெற்றிகள் உங்களுடையவை''

பிள்ளைகள் புலமைப் பரீட்சையில் வெற்றிப் பெற்றார்கள் என்று கேள்விப்பட்டவுடன் அதிபர் ஆசிரியர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களை அனுப்பினேன். இன்னும் பல வெற்றிகளை பெற போகின்றீர்கள். உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். இவ் வெற்றிகளுக்காக உழைத்த ஒவ்வொருவருக்காகவும் என் இதயம் கனிந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் வழங்க எனக்கு கிருபை செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் தாழ் பணிந்த வணக்கம்.

**சத்தியம் வெல்லும்**

உயர்ச்சியுடைய மாணவர் மாணவியரும் ஆசிரியர் குழாமும், பெற்றோரும் பழைய மாணவ மாணவிகளுடைய ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண இறையருளை வேண்டுகின்றேன்.

திரு. ஜோசப்
முன்னால் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best compliments of

# House of Curtain

For Excellent Vertical Blinds, Curtaining
and Upholstery Materials with Tailoring & Complete Service

NO. 87, D.S. SENANAYAKE VEEDIYA, KANDY.
TEL. 081-2223490

With Best Compliments of

# DHARSINI STORES

HARDWARE ITEMS

No 501 Kandy Road
BLAGOLLA
Tel 081-2423148


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க/தெல்/மகா பெரியத்தென்ன தமிழ் வித்தியாலயத்தில் 2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்து பாடசாலைக்கு பெறுமை சேர்த்த மாணவர்கள் அதிபருடன் .........................



இடமிருந்து வலமாக

செல்வி **M.** ரிஸ்வினி . செல்வி ***A.***அனுசா

அதிபர் திரு. K. மனோகரன் செல்வி ***B***. ரொஸானி .செல்வி ***B*** வினித்பிரியா

கற்பித்த ஆசிரியை திருமதி ***N.*** நலீமா நிரோசினி (படத்தில் இடம்பெறவில்லை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாபெரியத்தென்ன த.ம.வி.
## ஆசிரியர்கள்



இடமிருந்து வலமாக பின்வரிசை நிற்பவர்கள்
திருமதி G. கமலேஸ்வரி, திருமதி சுகந்தி, திருமதி N.மெடலினா,
திருமதி S. திருமதி G. அனுஷா, திருமதி K.காஞ்சனா,திருமதி சசிக்கலா,
திருமதி ஜெயசந்திரிக்கா திருமதி J.ஜேசுமலர் ,திருமதி கிருஸ்ணவேணி,
திருமதி N.நலீமா நிரோசினி B.சுபசந்திரிக்கா
முன்வரிசை அமர்ந்திருப்பவர்கள்
திரு.M.சுதர்ஷன், திருமதி S கலா, திருமதி K. செந்துார்செல்வி
திரு.A.தேவபாலன்(உதவி அதிபர்) திரு. K.மனோகரன்(அதிபர்)
திருமதி ஸ்ரீலலித்தேஸ்வரி திருமதி ருக்மணி, திரு.R.சிவஞானம் திரு.V.S.சபாபதி

## மகாபெரியத்தென்ன த.ம.வி.
## மாணவத் தலைவர்கள்



இடமிருந்து வலமாக பின்வரிசை நிற்பவர்கள்
செல்வி N.ராதிகா, செல்வி K.ஜெயப்பிரியா,செல்வி R. வினோஜா, செல்வி S .சுபாசினி
செல்வன் S.சசிதரன், செல்வி S.கவியோகினி செல்வி G.கமலதர்சினி செல்வி S.சுபானி
செல்வி T. லோஜினி
முன்வரிசை அமர்ந்திருப்பவர்கள
செல்வன் C.எனஸ்ட்லி, திருமதி. ஸ்ரீலலிதேஸ்வரி திரு .K. மனோகரன்
திரு.V.S.சபாபதி செல்வன் J.A.பொஸ்கோ
செல்வி S.தனலெட்சுமி (படத்தில் இடம்பெறவில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்குருதேவ்



உலகில் வாழ்வாங்கு வாழ உடல் மன ஆரோக்கியம் அத்தியாவசியம் என்பதே ஞானிகள் வாக்கு அஃது அனைவரதும் பிறப்புரிமை, என பறைச்சாற்றி அதை அடைவதற்கான மார்க்கத்தையும் காட்டியுள்ளவர், இன்றைய ஞானி பரமகுரு பூஜ்ஜிய ஸ்ரீஸ்ரீரவிசங்கர்ஜீ ஆவார். இவர் வடிவமைத்து உலகிற்கு வழங்கியுள்ள "வாழும் கலை" பயிற்சி ஆன்மீக ஞானத்தையும் தற்கால அறிவியலையும் அடிப்படையாக கொண்டது. இப்பயிற்சி ஆண், பெண் சிறியவர் பெரியவர் ஜாதி மதம் என்ற எல்லைக்கோடுகளை மீறி அனைவரும் வாழ்வில் அதீத மாற்றத்தை அடைந்து பெரும் பயனடைய உதவுகிறது. இப்பயிற்சியின் முக்கிய அம்சமான சுதர்ஸன கிரியா அனைத்து நோய்களும் நீங்கி சிறந்த உடல் நலம் பெற்று கோபம் பயம் கவலைகள் நீங்கி மன அழுத்தம் விலகி அறிவு மேலோங்கி வாழ்வில் வெற்றி காண உதவுகின்றது. இந்த அற்புதமான வாழும் கலை பயிற்சி பிரச்சினைகள் மிகுந்துவரும் இவ்வுலகிற்கு அன்பு அமைதி ஆனந்தத்தைத் தரவல்லது.

தொடர்புகளுக்கு : 077-3793334, 0777682055

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று சித்தி எய்திய மாணவச் செல்வங்களுக்கு எமது ஆசீர்வாதங்களும் பாராட்டுக்களும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோன்மணி மணக்கிறாள்

### சிறுகதை:

பனித்துளிகள் ஈரமாக்கிக் கொண்டிருந்த விடிந்தும் விடியாத காலைப் பொழுது, ஈரத்தை உலரவைத்து முழுமையாக மலர்ந்து விடுவோம் என்ற எத்தனிப்பில் மலர்ந்தும் மலராத செவ்வரத்தைப் பூக்கள். பொழுது புலர்வதற்கு அறிகுறியாக அலாரம் வைத்து விட்டுச்செல்லும் புள்ளினங்கள். எங்கோ தூரத்தில் செல்லும் வாகனங்களின் சுப்ரபாதங்கள். இந்தப் பின்னணியில் வாயில் தூரிகை நடனமாட கேட்டடிக்கும் கிணற்றடிக்கும் ஒரு "வோக்கிங்" இது இராகவனின் நித்திய கருமம். கேட்டடிக்கு வந்த இராகவனை "அண்ணே" என்ற தர்மாவின் குரல் தடுத்து நிறுத்தியது. தர்மா இராகவனின் எதிர்வீட்டுத் தலைவன். இருவரது வீட்டுக்கும் இடையில் ஒரு ஒற்றையடிப்பாதை பூச்செடிகளின் தாகம் தணித்துக்கொண்டிருந்த தர்மாவை ஏறிட்ட இராகவன் "என்ன தர்மா கூப்பிட்டனியே" என்றதும் "இஞ்ச மனமணியின்ர கத முடிஞ்சு போச்சுதாம்" என்றான், தர்மா ஈனஸ்வரமான குரலில். "ஆர் எங்களின்ர மனமணி அக்காவோ" என்று தன் சந்தேகத்தை உறுதிப்படுத்திக் கொண்டார் இராகவன் "ஓம் ! மூன்டு நாளா அன்னம் தண்ணி ஒண்டுமில்லையாம். நேற்றிரவு பதினொன்றுக் கெல்லாம் சீவன் போட்டுதாம்" என்று சொந்த வேலைக்கு மீண்டார் தர்மா. ஆனால் இராகவனால் உடனே மீள முடியவில்லை. இதயம் பல கிலோக்கள் பாரங் கூடியது போன்று கனத்தது. தொண்டைக்குழிக்குள் ஏதோஒரு இனம் புரியாத வலி. சுனாமியால் உள்ளீர்க்கப்பட்ட கடலலை போல் அவன் நினைவலைகள் பின்னோக்கிச்சென்றன.



இயற்கையாகவே இறைவன் கொடுத்தது அழகிய முகம்தான். நல்ல மாநிறம் . இருப்பினும் எதைக் குறையாக கண்டாளோ! அதை நிறைவு செய்ய பூசாத கிரீம்களோ பவுடரோ இல்லை. மானாக , மீனாக ,வேலாக, வாளாக தோற்ற அவள் கண்களுக்கு செய்த சித்திர வதைகளோ அனந்தம். காவிய வர்ணனைக்குள் உதடுகளை காட்ட முயன்று தோற்றுப்போய், பிணம் தின்னிக் கழுகுகள் போலாகும் கன்றாவியை அவள் எங்கே அறிவாள் . தோட்பட்டை வரை சாவிக் கொத்தினை தொங்கவிட்டது போல் விதவிதமான காதணிகள். அவை அசைவதற்காக வேண்டுமென்றே தலையசைத்து நடக்கும் பாங்கு. அங்கங்கள் தெரிய அரை குறை ஆடைகளுடன் அவள் உலா வரும்போது அதை விமர்சிக்காதவர்களே இல்லை எனலாம். அப்போது இராகவனும் அவனது சகாக்களும் விடலைப் பையன்கள் அவர்களுக்கும் அதில் பங்குண்டு.

"அங்க பாரடா மனமணி அக்கா போறாடா, தூக்குதடா" என்று மூச்சை இழுத்து அதன் வாசத்தை சுவாசித்தவர்கள். மனோன்மணி என அன்னை இட்ட பெயரே , நாளடைவில் மருவி மனமணி ஆகியது. சவுதிச் சென்ட் கமகமக்க ,நடையுடை பாவனைகளால், ஊரையே ஒரு கலக்கு கலக்கி அப்போதைய வாலிபர்களின் கனவுக்கன்னியாக பரிணமித்தாள். சுமார் ஒரு வருடம் செல்ல கையில் பசைகுறைய , மீண்டும் பறந்தாள் வெளிநாட்டிற்கு சில வருட இடைவெளிக்கு பின் மீண்டும் மறு ஒளிபரப்பானாள். அதே போல் ஆடை அலங்காரங்களுடன் மீண்டும் ஊருக்குள் பவனிவந்தாள். சுல்வாரோ,சேலையோ நிறத்திற்கேற்ப ஏனைய ஆபரணங்கள். கண்டோரை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் காந்த சக்தி. எதிரில் வந்தாலோ அன்றி எம்மைக் கடந்து சென்றாலோ அந்த சவுதி சென்ட் வாசனை முன்னால் வந்து தகவல் சொல்லும் இராகவனும் அவன் நண்பர்களும் அப்போது உயர்தர மாணவர்கள் இராகவனின் நண்பனோ இன்னும் அந்த " மனமணி மணக்கிறாள் " என்ற வாசகத்தை மறக்கவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி வாழ்க்கை முடிந்தது. எல்லோரும் ஆளுக்கொரு திசையாக சிதறிவிட்டார்கள். இராகனுக்கு அவ்வூரிலுள்ள கமத்தொழில் திணைக்களத்தில் வேலை கிடைத்ததனால் அங்கேயே வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிக்கொண்டிருந்தான். கடந்த ஒரு வருடமாகத்தான் மனோன்மணி சுகவீனமுற்று வைத்தியமும் மருத்துவமுமாயிருந்தாள். அதுவரையில் அவள் காட்டில் மழைதான். இப்படித்தான் வாழ்க்கை என்பது அவள் அகராதியில் இல்லை. எப்படியும் வாழலாம் என்பது அவள் வாழ்க்கைக்கு கொடுத்த வரைவிலக்கணம், தனக்கொரு வீடு தனக்கொரு கணவன், தனக்கொரு குடும்பம் என்பதை மறந்து நாளொரு வாழ்க்கை பொழுதொரு இடமும் அவள் வாழ்க்கைப் பாதையாகியது. அலங்காரங்களும், ஆடம்பரங்களும் வாழ்வின் அடிப்படையென கருதினாள். இளமையும் அழகும் நிரந்தரமானது என எண்ணி இறுமாந்து போனாள். இவள் மட்டுமல்ல, இவளைப்பபோல் ஏராளமான பெண்கள் இப்படி வாழ்நாளை கழித்தாலும், மனோன்மணியின் வாழ்க்கை மட்டும் தெருவிளக்கானது. உற்றார் உறவினர் கூறிய அறிவுரைகள் எல்லாம் புறக்குடத்தில் வார்த்த நீரானது. சில சமயங்களில் மனோன்மணிக்கு அறிவுரை கூறப்போய் அவள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற முடியாது கூனிக்குறுகிய சம்பவங்களும் உண்டு. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் தனிக்காட்டு ராணியாக திகழ்ந்து இன்று உயிரற்ற பிணமாக கிடக்கிறாள். நீண்ட பெருமூச்சுடன் நினைவலைகளிலிருந்து மீண்ட இராகவன் கடைவாய் வழியே வழிந்த எச்சிலை கொப்பளித்து தன் கடமைக்கு திரும்பினான். அப்போதே மனோன்மணி அக்காவின் முகத்தை ஒருமுறை பார்க்க் வேண்டும் என ஒரு உந்தல் இருந்தாலும் இறுதிக்கிரியைகளிலே கலந்து கொள்வதே சரியென தீர்மானித்தான்.

மனோன்மணியின் வீடு மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. அது அவள் இறந்த துக்கத்தால் அல்ல. அங்கு மக்கள் எண்ணிக்கை மிக அரிதாயிருந்ததால், சவரம் செய்யாத காவி வாய்களுடன் தலைக்கு மேல் சுருள் சுருளாக புகைவிட்டபடி நான்கு பேர் சீட்டாடிக்கொண்டிருந்தனர். நானே ராஜா நானே மந்திரி என்பது போல இரண்டு சிறுவர்கள் மிக மகிழ்ச்சியாக கெரம் விளையாடிக்கொண்டிருந்தனர். நரை திரை மூப்பு கண்ட இரு கிழவிகள் ஆங்கே சுருண்டு கிடந்தனர். இராகவன் மெல்ல நடந்து வீட்டின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பிரேதத்தின் அருகில் வந்தான். எங்கிருந்தோ ஒருவன் ஓடிவந்து கடமைக்காக ஒரு கும்பிடு போட்டான். சாராய நெடி குப்பென்ற இராகவன் முகத்தில் மோதியது. மெதுவாக மனோன்மணியின் முகத்தை பார்த்தான். ஆது அவள் தான் என்பதற்கு அவளது இடது புற புருவத்திற்கு மேலிருந்த அந்த மச்சத்தை தவிர வேறு எந்த சாட்சியும் இல்லை. முகமும் தோற்றமும் ஒட்டியுலர்ந்து எலும்பும் தோலுமாக கிடந்தது. மனதில் எழுந்த பல ஆதங்கங்களை மூடி வைத்து மெதுவாக வெளியில் வந்து திராணியற்றவன் போல் கதிரையில் அமர்ந்தான் இராகவன். ஒருவர் இருவரென அந்த கொட்டகைக்குள் கூடினர். நான்கு மணிக்கு எடுக்கிறார்கள் என்ற செய்தி கீறல் விழுந்த இசைத்தட்டுப்போல் கேட்டுக்கொண்டிருந்தது. எடுக்குமளவு இருந்து விட்டுச் செல்வோம் என தாமதித்தான் இராகவன். ஊருக்குள் இருக்கும் பெருசுகள் சில சேர்ந்து சம்பிரதாயம் என்ற பெயரில் எதையோ செய்து கொண்டிருந்தனர்.உள்ளேயிருந்து போலியான ஒரு ஒப்பாரி வெளியே வந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் மௌனம். ஒரு தலை சத்தமிட்டது. " பிரேதம் மணக்குது, கெதியாக எடுக்கனும்" இராகவனின் நெஞ்சில் சுரீர் என தைத்தது. மீண்டும் மீண்டும் அந்தவாசகம் பிரேதம் மணக்குது......... மின்னலாய் வெட்டி வெட்டி மறைந்தது. மனமணி அக்கா மணக்கிறாள் என்ற அந்த வாசகத்தையும் இந்த வாசகத்தையும் ஒப்பிட்டு பார்க்கிறான். எவ்வளவு நேரம் இராகவன் இருந்தானே தெரியவில்லை. சுய நினைவு வந்து பார்த்த போது பிரேத ஊர்வலம் வீட்டை விட்டு வெளியே சென்று கொண்டிருந்தது.

திருமதி. ருக்மணி இராமச்சந்திரன்
(ஆரம்பக்கல்வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகை செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம், மற்றையது பொருட் செல்வம். பொருட்செல்வம் பிறருக்கு கொடுக்குந்தோறும் குறைவுபடும். நீராலும் நெருப்பாலும் அழியக்கூடியது. பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ அழிவற்றது. நீராலோ நெருப்பாலோ அழியாதது. கள்வரால் களவாட முடியாதது. பிறருக்கு கொடுக்கக் கொடுக்க கூடிக் கொண்டே செல்வது தான் கல்விச் செல்வம். இதனால் தான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம் முன்னோர்களும் போற்றியிருக்கிறார்கள். "கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்று கூறியுள்ளன. கல்விச்செல்வம் இறைவன் எமக்கு கொடுத்த நன்கொடை எனவும், வரப்பிரசாதம் என்றும் கூறினால் அது மிகையாகாது. மனிதரிடத்திலுள்ள அறியாமையை போக்கிவிடுவது கல்விச் செல்வமே ஆகும். கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான். உலகில் காணப்படும் எல்லாச் செல்வங்களையும் விட தனிச் சிறப்புடையது நம் கல்விச் செல்வம். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று நம்முன்னோர் கூறியுள்ளனர். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றை கற்று, கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும். அதனாலேயே திருவள்ளுவர்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார்.

கற்க வேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும். கற்க வேண்டிய பருவத்திற் கற்க வேண்டும். இளமையிற் கற்பதே சிறந்த செயலாகும். பிற்கால வாழ்வுக்கு வேண்டிய பயிற்சியையும், அறிவையும் இளமைக் காலத்திலேயே நாம் தேடிக் கொள்ளுதல் வேண்டும். கல்விச்செல்வத்தைத் தேடிக் கொள்ளுதற்குரிய காலம் இளமைக்காலமே. எனவே இளமை கல்வியில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி. இளமையில் நாம் பெறும் கல்வி அறிவு, பசுமரத்தாணிபோல் நமது உள்ளத்தில் பதியும் எல்லா வித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அழகே சிறந்த அழகாகும். இக்கல்வி அழகினைப் பெறுவதற்கு நாம் சலியாது முயற்சிக்க வேண்டும். இக்காலத்தில் நல்ல அறிஞர்களின் தொடர்பினை நாம் பெற்றுக்கொள்ள முயல வேண்டும். கற்பதற்கு வயதுக் கட்டுப்பாடே இல்லை. வாழ்நாள் முழுவதுமே கற்கலாம். "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்னும் கூற்றை நாம் மறக்கக்கூடாது. இளமைக்காலம் நமது வாழ்க்கையில் ஒரு முறையே வரும். இக்காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கற்க வேண்டியவற்றை கற்று கற்றபடி ஒழுக நாம் முயற்சிக்க வேண்டும்.

அழியாத செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்று இவ்வையத்து வாழ்வாங்கு வாழ நாம் முயற்சிப்போமாக.

ஜெரால் அனுஷா
தரம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS OF

STAR ELECTRICALS

151,D.S.Senanayake Veediya,
KANDY
TEL: 081-2223659

WITH BEST COMPLIMENTS OF

UDADUMBARA
TRADERS

WHOLE SALE & RETAIL

NO,25,MAIN STREET,
DIGANA,RAJAWELLA

Tel: 081-2374306,0773183046,
081-2376688


பரீட்சையில் சித்திபெற்ற
மாணவர்களுக்கும்,
கற்பித்த ஆசிரியரிற்கும் ,
அதிபரிற்கும்
எமது நல்வாழ்த்துக்கள்

க/மெ/சிவனேஸ்வரா த.ம.வி.
உன்னஸ்கிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை



கவலை சிறிதும் இல்லா
குழந்தை பருவத்திலே
தவளைக் குஞ்சென நாம்
சஞ்சரித்த காலத்திலே!
சொல்லில் அமுதொழுக
சொச்சி அம்மா பாச்சி என்று
செல்ல மொழி பயின்று
சிரித்து வந்த காலத்திலே!
பிள்ளைக் கனியமுதே
பேசும் பொற் சித்திரம்! என்று
அள்ளி அன்னை அணைத்து
அன்பு சுரந்தென்னை,
முத்தம் கொடுத்து - அன்னை
முகத்தோடு முகம் அணைத்து
புகழ்ச்சி நான் பெற
புத்தி சொன்னாள் என் அன்னை

ஈயெறும்பு அணுகாமல்
எமக்காகத் தனை வருத்தி
தாய்மைப் பணிப்புரிந்தாள்
என் அன்னையவள் அடிப்பாள்
ஒருகையால் அணைப்பால்
மறுகையால். துடிக்கும்
அவளது இதயம்
தூண்டில் மீனைப் போல!
உண்ணத் தந்து எம்மை
உறங்க வைத்து சீராட்டி
முன்னேற்றி வைத்தாள்
ஏன் தாய் தேசம் அறிய!
ஒவ்வொரு உயிரிலும்
ஓர் அங்கமாய் இதயம் உண்டு
அறிவேனே ஒவ்வொரு அங்கமும்
இதயமாய் உள்ள ஓர் உயிர்
எந்தன் தாய் தானே!

கணேஷன் கமலதர்ஷினி
தரம் 13 கலைப்பிரிவு

## அன்பு




முதலில் மலர்வது தாயின் அன்பு
முதுமையில் தோன்றுவது பிறரின் அன்பு
இதயத்தில் வருவது இறை அன்பு
இன்பம் தருவது உறவினர் அன்பு
வேலையில் வேண்டியது தொழில் அன்பு
வேதம் கற்பிக்கின்றது உயிர்களிடம் அன்பு
இடையில் வேண்டியது வாழ்க்கை அன்பு
இதனால் வருவது நமக்கு நற்பண்பு

V. கிருஷ்ணஜா.
தரம் 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments of

# VICTORIYA STORES




## NATTARANPOTHA
## KUNDASALE

081-2421607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாணவப் பருவம் தான்
மாண்பான வாழ்வமைக்க,
ஆனதோர் கருவி என்று
உணர்ந்த நீங்கள்,
உணர்ந்ததை உணர்ந்ததுபோல்
உலகினில் செய்து காட்டி
கணமுமே கல்வி கற்று
காலத்தை வெல்ல
உளமார வாழ்த்துகிறேன்!

திருமதி R.ராஜகோபால்
முன்னால் பிரதி அதிபர்
மகாபெரியத்தென்ன.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments of




FOR CONTACT

*Office :No-317/2*
*Digana, Rajawella*
*T.P. 081-2374478*


*Res.Amila,Manzil,*
*No655, Balagolla,*
*Kengalla*
*T.P.081-2420164*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதா



உன் இதயத்தை
ஒரு முறை புதுப்பித்துவிடு
நிலையில்லா இவ்வுலகில்
நித்தமும் நீ நிம்மதியை
தேடி அலைகின்றாய்.
வாழ்க்கையின் பலம்
சந்தோஷம் தானே!
சந்தோஷம் இல்லாவிட்டால்
உன் வாழ்வே தோஷமடா
விதியின் பார்வைதனில்
விழியில்லா சித்திரமாய்
விடியலை தேடிய நீ
விழி கொண்டு
விடியலை காண்பாய் !
இழந்துவிட்ட ஒன்றை நினைத்து
இருப்பதையும் இழந்து விடாதே
மடிந்து விட்ட உயிர்கள் தான்
இனிமேலும் திரும்பிடுமா?
விழித்தெழு ஒரு முறை
வாழ்க்கையில் நிம்மதியாய்
வாழ்ந்து விட்டு போ
சாதனை புரியாவிட்டாலும் சந்தோஷமாய்
வாழ்ந்து விட்டு போ
துன்பத்தை கண்டு
துவண்டு விடாதே!
துணிந்து நில்!
நீயும் சாதனை மனிதன் தான்
சந்தோஷமாய் வாழ்ந்தால் ......



V.வித்தியா
ஆண்டு 11

# உலகின் முதலாவது பெண்

1. ஜனாதிபதி : மரியா ஸ்ரொலா பெரோன்
2. பிரதமர் : சிறிமாவோ பண்டார நாயக்க
3. மருத்துவர் : எலிசப்பிளக்
4. பல் மருத்துவர் : லூதி கொப்ஸ்
5. வழக்கறிஞர் : அரபெல்லா மேனஸ் ஃபிலிட்
6. நீதிபதி : எஸ்தர் எலிஸி
7. விமானி : மைலி எலிஸி
8. பொலிஸ் : ஆலிஸ் ஸ்ரெப்பினஸ் வெல்
9. புகையிரத ஓட்டுனர் : அன்னே விண்டர்
10. விண்வெளி பயணம் செய்தவர் : வலன் ரீனா ரெறெஸ் கோவா

ஜே. ஏ. பொஸ்கோ
ஆண்டு 12 கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes of




No,6, Ducwari Bazzar
Rangala
0812-400310




அன்பான மாணவர்களே!
உங்கள்
வெற்றி பயணம்
தொடர வாழ்த்துக்கள்

ஜோம் பத்திரிகை
ஆசிரியர்
சிவனேஸ்வரா.த.ம.வி
உடஸ்ஸிரிய

With Best Wishes of

NEW JEBAN HARDWARE



No.218, Balagolla,
Kengalla

With Best Wishes of

GANAPATHI TAILORS



MR.R.UAMADEUAN
580/B BALAGOLLA,
KENGALLA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசோன் $(O_3)$

இது ஓட்சிசனில் இருந்து உருவாக்கப்படுகின்றது. புவிமேற்பரப்பில் 10km - 50Km தூரம் வரையிலான உயரத்தில் பூமியை சுற்றி போர்வையாகக் காணப்படும் படையாகும். வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசனுடன் புற ஊதா கதிர்வீசல் ஏற்படுத்தும் தாக்கத்தினால் இது தோற்றுவிக்கப்படுகிறது. இது சூரியனில் இருந்து வரும் ஆபத்தை விளைவிக்கும் புற ஊதாக்கதிர்கள் மிகையான வெப்பம் என்பவற்றை அகத்துறிஞ்சி பூமியை பாதுகாக்கின்றது.

$$O + O \rightarrow O_2$$

$$O_2 + O \rightarrow O_3$$

ஓசோன் சிதைவடைதல்

ஓசோன் சிதைவிற்கு பிரதான காரணியாக விளங்குவது (CFC) குளோரோபுளோரோ காபன்கள்) உ-ம் $CF_2Cl_2, CFCl_3$ நைத்திரிக் ஒட்சைட் (NO) என்பனவாகும்.

* $NO + O_3 \rightarrow NO_2 + O_2$

$NO_2 + O \rightarrow NO + O_2$

* $CF_2Cl_2 \rightarrow CF_2Cl + Cl$

